IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C NO.79/2026

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | SENTHILKUMAR |
| FATHER'S NAME | : | GOVINDHASAMY |
| VILLAGE | : | VELLORE |
| OCCUPATION | : | HC |
| AGE | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 15th day of JULY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர்இல்லை. குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருவலம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் எதிரியை தெரியும். கடந்த 19.04.2026 ம் தேதி மேற்படி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது மாலை 17.00 மணிக்கு உதவி ஆய்வாளர் மஞ்சுநாதன், சிறப்பு உதவி ஆய்வாளர் மனவாளன் மற்றும் நானும் ரோந்து பணி மேற்கொண்டு திருவலம் காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டம் ஒழுங்கு, குற்ற தடுப்பு, மதுவிலக்கு, கஞ்சா மற்றும் குட்கா சம்மந்தமாக கண்காணித்து கொண்டு போகும்போது கிடைத்த தகவலின் பேரில் திருவலம் பொன்னை கூட்ரோட்டிடம் சென்று பார்க்க ஒரு நபர் சந்தேகப்படும்படியாக இருசக்கர வாகனத்தின் டேங்க் மீது ஒரு வெள்ளை நிற பாலிதீன் பையில் எதையோ வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தவர் போலிசாராகிய எங்களை கண்டதும் இருசக்கர வாகனத்தை ஸ்டார்ட் செய்து தப்பி செல்ல எத்தனித்தவரை நாங்கள் போலிஸ் பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்து பெயர் விலாசம் பற்றி விசாரிக்க கோபால், த/பெ. கிருஷ்ணன், வாலாஜா என்று கூறினார். மேலும் இருசக்கர வாகனத்தின் டேங்க் மீது வெள்ளை நிற பாலித்தீன் பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் தலா 180மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY-10 பாட்டில்கள், 2)MCLONE BRANDY 17 பாட்டில்கள், 3)MONITOR GOLD RUM-4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் இருந்தது. அதை பற்றி அவரிடம் விசாரிக்க அரசு மதுபான கடையிலிருந்து ஏற்கனவே வாங்கி வைத்திருந்த மதுபான பாட்டில்களை எடுத்து வந்து அரசு அனுமதியின்றி தனது சுயலாபத்திற்காக கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். பின்னர் எதிரியிடமிருந்து தலா 180மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY-10 பாட்டில்கள், 2)MCLONE BRANDY 17 பாட்டில்கள், 3)MONITOR GOLD RUM-4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் மற்றும் TN 05 AT 2298 என்ற பதிவு எண் கொண்ட Honda Accent இருசக்கர வாகனம் ஒன்றை கைப்பற்றுதல் மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியமாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல்

மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து பாரவசம் ஒப்படைத்து வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

ரோந்து பணிக்கு உதவி ஆய்வாளர் மஞ்சுநாதன், சிறப்பு உதவி ஆய்வாளர் மனவாளன் ஆகியோருடன் பொன்னை கூட்ரோடுக்கு சென்றோம். சம்பவ இடம் திறந்தவெளி என்றால் சரிதான். எதிரியிடமிருந்து 180மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY–10 பாட்டில்கள், 2)MCLONE BRANDY 17 பாட்டில்கள், 3)MONITOR GOLD RUM–4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் கைப்பற்றினோம். வழக்கு சொத்து கைப்பற்றும் போது வீடியோ பதிவு எடுக்கவில்லை. எதிரி வழக்கு சொத்தை பாலித்தீன் பையில் வைத்திருந்தார். பையை வழக்கு சொத்தாக கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்திருந்தால் பையை கைப்பற்றி இருப்போம் என்றும், பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை ரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பவில்லை. நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றும், உயர் அதிகாரி கேட்டு கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C NO.79/2026

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | MANAVALAN |
| FATHER'S NAME | : | RANGANATHAN |
| VILLAGE | : | THIRUVALAM |
| OCCUPATION | : | SSI |
| AGE | : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 15th day of JULY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருவலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் எதிரியை தெரியும். கடந்த 19.04.2026 ம் தேதி மாலை 17.00 மணிக்கு உதவி ஆய்வாளர் மஞ்சுநாதன், தலைமை காவலர் செந்தில்குமார் மற்றும் நானும் ரோந்து பணி மேற்கொண்டு திருவலம் காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டம் ஒழுங்கு, குற்ற தடுப்பு, மதுவிலக்கு, கஞ்சா மற்றும் குட்கா சம்மந்தமாக கண்காணித்து கொண்டு போகும்போது கிடைத்த தகவலின் பேரில் திருவலம் பொன்னை கூட்ரோட்டிடம் சென்று பார்க்க ஒரு நபர் சந்தேகப்படும்படியாக இருசக்கர வாகனத்தின் டேங்க் மீது ஒரு வெள்ளை நிற பாலிதீன் பையில் எதையோ வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தவர் போலிசாராகிய எங்களை கண்டதும் இருசக்கர வாகனத்தை ஸ்டார்ட் செய்து தப்பி செல்ல எத்தனித்தவரை நாங்கள் போலிஸ் பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்து பெயர் விலாசம் பற்றி விசாரிக்க கோபால், த/பெ. கிருஷ்ணன், வாலாஜா என்று கூறினார். மேலும் இருசக்கர வாகனத்தின் டேங்க் மீது வெள்ளை நிற பாலித்தீன் பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் தலா 180மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY–10 பாட்டில்கள், 2)MCLONE BRANDY 17 பாட்டில்கள், 3)MONITOR GOLD RUM–4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் இருந்தது. அதை பற்றி அவரிடம் விசாரிக்க அரசு மதுபான கடையிலிருந்து ஏற்கனவே வாங்கி வைத்திருந்த மதுபான பாட்டில்களை எடுத்து வந்து அரசு அனுமதியின்றி தனது சுயலாபத்திற்காக கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். பின்னர் எதிரியிடமிருந்து தலா 180மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY–10 பாட்டில்கள், 2)MCLONE BRANDY 17 பாட்டில்கள், 3)MONITOR GOLD RUM–4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் மற்றும் TN 05 AT 2298 என்ற பதிவு எண் கொண்ட Honda Accent இருசக்கர வாகனம் ஒன்றை கைப்பற்றுதல் மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியமாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து பாரவசம் ஒப்படைத்து வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

ரோந்து பணிக்கு உதவி ஆய்வாளர் மஞ்சுநாதன், தலைமை காவலர் செந்தில்குமார் ஆகியோருடன் திருவலம் பொன்னை கூட்ரோடு அருகே சென்றோம். சம்பவ இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். எதிரியிடமிருந்து தலா 180மிலி அளவு கொண்ட 1)GOLDEN EAGLE DOCTOR BRANDY-10 பாட்டில்கள், 2)MCLONE BRANDY 17 பாட்டில்கள், 3)MONITOR GOLD RUM-4 பாட்டில்கள் என மொத்தம் 31 பாட்டில்கள் கைப்பற்றினோம். வழக்க சொத்தை கைப்பற்றும் போது வீடியோ பதிவு எடுக்கவில்லை. பாலித்தீன் பையை வழக்கு சொத்தாக கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றினோம். சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் பையை கைப்பற்றி இருப்போம் என்றும், இந்த வழக்கில் குறிப்பிட்டு கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. உயர் அதிகாரி கேட்டு கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 15.07.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU
Date: 2026.07.15 17:17:41 +0530

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.